# மஹாவம்சம் : ஸ்ரீலங்கா வரலாறு

| | |
|---|---|
| தமிழில் | சாந்திப்பிரியா |
| ஆங்கிலத்தில் | ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர் |
| பின்னர் மாற்றி எழுதியது | மேபில் ஹேனஸ் போடே |



## 19: போதி மரம் ஸ்தாபனம்

போதி மரத்தை பெற்றுக் கொண்டு வந்த இளவரசர் அதை பயணத்தின் பொழுது பாதுகாத்து கண்காணித்து தண்ணீர் ஊற்றி வர ஒரு குழுவை நிறுவினார். அதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் எட்டுக் கிண்ணம் தங்கம் மற்றும் வெள்ளியைத் தந்தார். அதில் அரச குடும்பத்தில் இருந்து பதினெட்டு பேர், அமைச்சர்கள் குடும்பத்தில் இருந்து பதினெட்டு பேர், பிராமணர்கள் குடும்பத்தில் இருந்து எட்டு பேர், வியாபாரிகள் எட்டு பேர், ஆடு-மாடு மேய்ப்பவர் எட்டு பேர், கழுதை மற்றும் பறவை பிடிப்பவர், மண்பாண்டம் செய்பவர், நெசவாளி, பிற தொழில் கலைஞர்கள், நாகர்கள், யட்சிணிகள் போன்ற பிரிவுகளில் ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொருவர் என பல பிரிவைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். தான் வந்த கப்பலில் அந்த போதி மரத்தை வைத்து, சங்கமித்தாவுடன் வந்த பதினெட்டு பிக்குணிகளையும் ஏற்றிக் கொண்டு விஞ்சரா மலை வழியாக *(Viñjhā-mountains)* ஒரு வாரத்தில் தாமலிட்டிக்கு *(Tamalitti)* வந்து சேர்ந்தார்.

ஸ்ரீலங்காவில் அனுராதபுரத்தில் உள்ள ஆலமரம் போதி மரத்தை சார்ந்தவைதான். ஆறாம் நூற்றாண்டில் புத்தர் எந்த மரத்தின் அடியில் ஞானமடைந்தாரோ அந்த மரத்தின் கிளையை நட்டு வளர்க்கப்பட்டதே அந்த ஆலமரம். கி:மு 288 ஆம் ஆண்டில் அசோகருடைய மகளினால் எடுத்து வரப்பட்டு அனுராதபுரத்தில் நடப்பட்ட அந்த மரமே தற்பொழுது உயிர் வாழும் மரங்களில் முதன்மையானதும் மிகப் பழமையானதும் ஆகும்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

நாகர்கள், தேவதைகள் மற்றவர் என பலரும் வழிபட்ட அந்த போதி மரம் ஒரு வார கடல் பயணத்திற்குப் பின் தரை இறங்கியது. அதை கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தப் பின் அதைக் கொடுத்த மன்னாதி மன்னன் விந்திய மலைஅடிவாரத்தில் இருந்த கங்கையில் தான் பயணம் செய்து கொண்டு இருந்த பொழுது, மீண்டும் வழியில் அந்த போதி மரத்துடன் சென்று கொண்டு இருந்த கப்பலைக் காண அந்த அதற்கு தன் வணக்கங்களை மீண்டும் தெரிவித்தார்.

மாகசீரா மாதத்தின் வளர் பிறையில் அந்த போதி மரத்தை அங்கிருந்து எடுத்துப் போகச் சொன்ன மன்னாதி மன்னன் அதனுடன் வழித் துணைக்கு அனுப்பியிருந்த எட்டு உயர் குலத்தை சார்ந்தவர்களை அந்த மரம் கழுத்தளவு வளர்ந்து வரும் வரை அதை பராமரிக்கும்படிக் கூறி இருந்தார். தேரி மற்றும் அவருடன் வந்திருந்த எட்டு பிக்குணிகளை கப்பல் அடித்தளம் வரை தானே அழைத்துச் சென்ற மன்னர் முக்கிய மந்திரி மஹாரிட்டாவிடம் கூறினார் ' நான் மூன்று முறை அந்த மரத்திற்கு பூஜைகள் செய்தேன். அது போல என் நண்பரான உங்கள் நாட்டு மன்னனும் அதற்கு உரிய மரியாதையை அளித்து வணங்குவார் என நம்புகின்றேன்' இப்படியாகக் கூறிய பின் மேலும் 'சூரிய கிரண ஒளி போல பத்து சித்திகளையும் வைத்திருந்து ஜொலித்த போதி மரம் இன்று இங்கிருந்து கிளம்பிச் செல்கின்றதே' என கண்களில் கண்ணீர் வழிய நதிக் கரையில் நின்று மன்னன் புலம்பினார்.

போதி மரத்தை அனுப்பிவிட்டு வருகின்றோமே என அழுது புலம்பிய தம்மகோசா தன் தலைநகருக்குத் திரும்பினார். அந்த கப்பலில் மிதந்தவாறு போதி மரம் செல்லத் துவங்க

ஒரு யோசனை தூர அளவிற்கு நதியின் நீர் அமைதியாக ஓடிக் கொண்டிருக்க, ஐந்து வண்ண தாமரைப் பூக்கள் வழி எங்கும் பூத்துக் குலுங்கி அது சென்ற பாதைக்கு அழகூட்ட, இயற்கை எழுப்பிய இன்ப நாதத்தில் மெல்ல அந்த கப்பல் நகர்ந்தது.

வழி எங்கும் பல தேவதைகள் தமது வணக்கங்களை அந்த போதி மரத்திற்கு தெரிவித்துக் கொண்டு இருக்க, கடலில் இருந்த நாகங்கள் தமது மந்திர சக்தியை உபயோகித்து அந்த போதி மரத்தினை தாம் எடுத்துக் கொள்ள முயற்சி செய்ய, சங்கமித்தா தன்னை ஒரு ஒரு கருடன் போல உரு மாற்றிக் கொண்டு அவற்றை பயமுறுத்தித் துரத்தினாள். அந்த கருடனைப் பார்த்து பீதி அடைந்த போன நாகங்கள், மிக கஷ்டப்பட்டு தேரியை சந்தித்து தம்மை மன்னிக்கும்படி மன்றாடின. பின் சர்பங்கள் இருந்த பிரதேசத்தை அது நெருங்கியவுடன் நாகர்களின் தலைவர் அந்த மரத்திற்கு பலவிதமான பூஜைகள் மற்றும் வணக்கங்களைத் தெரிவித்து பல விதப் பரிசுப் பொருட்களையும் அதற்குக் கொடுத்து மரியாதை செய்து தம்முடைய பிரதேசத்தை விட்டு பாதுகாப்பாகச் செல்ல வழி வகுத்தார். அதன் பின் போதி மரம் அப்பொழுதைய சிலோன் என்ற ஜம்புகோலாவிற்கு வந்து சேர்ந்தது

தேவனாம்பியதிஸ்ஸாவிற்கு சாமனீய சுமன்தா தான் வந்து கொண்டிருப்பதின் விவரத்தை முன்னரே அறிவித்து இருந்தார். அதனால் பெரும் மகிழ்சியில் இருந்த மன்னன் போதி மரம் வந்திறங்கும் நாள் குறைவாக இருந்ததினால் மாகசீரா மாதத்தின் ஆரம்பத்தில் இருந்தே ஒரு மாதமாக சமுத்திரக் கரையில் இருந்து ஜம்புகோலாவிற்கு வந்தடைந்த பாதைகளை சீரமைக்கும்படிக் கூறி இருந்தார். தேரியின் சக்தியினால்

சமுத்திரக்கரையில் தோன்றிய சமுத்தனபாடசாலா *(Samuddapannasälä)* என்ற இடத்தில் போதி மரத்தை வரவேற்க அற்புதமான கூடத்தையும் அமைத்தார். அதன் பின்னர் அந்த தேரி, மற்ற தேராக்கள், தன்னுடைய பரிவாரங்களுடன் அன்றைக்கே தேரியின் சக்தியினால் ஜம்புகோலாவுக்குத் திரும்பினார்.

போதி மரம் வந்தவுடன் பெரும் ஆரவார கோஷங்களுக்கு இடையே கழுத்தளவு நீரில் இறங்கி கப்பலை அடைந்த மன்னன், அந்த போதி மரத்துடன் வந்திருந்த பதினாறு உயர்குல மக்கள் சூழந்திருக்க அதை தன் தலை மீது வைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து அங்கிருந்த மைதானத்தில் அதை இறக்கி தன்னுடைய அரசின் சார்பாக வணக்கங்களை அளித்தார். அதன் பின் அந்த நிகழ்சியை கொண்டாடும் வகையில் மூன்று நாட்களுக்கு விழா எடுக்குமாறு கூறிய பின் அந்த போதி மரம் உள்ள இடத்தைப் பாதுகாக்க தன்னுடைய நாட்டில் இருந்து பதினாறு பேரை நியமித்த பின் தன்னையும் நுழைவாயிலில் காவலுக்கு உள்ள ஒரு காவலராக நியமித்துக் கொண்டார்.

பத்தாவது நாளன்று போதி மரத்தை ஒரு இரதத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு ஊர்வலமாக எடுத்துச் சென்றார். அதில் தானும் கலந்து கொண்டார். பின்னர் கிழக்குப் பகுதியில் அமைந்த இராஜாங்கம் உள்ள இடத்தை அந்த இரதம் அடைந்தது. அந்த இடத்தில் அனைவரும், மக்கள் முதல் அனைத்து புத்த சகோதரர்கள் வரை, உணவு அருந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. அந்த நேரத்தில் புத்தர் இரண்டாம் முறையாக சிலோனுக்கு வந்த பொழுது எப்படி நாகங்களின் கொட்டத்தை தன்னுடைய பத்து சக்தியினால்

அடக்கினார் என்ற விவரத்தை தேரா மஹீன்தா மன்னனுக்கு எடுத்துரைத்தார்.

அதைக் கேட்டு மகிழ்ந்து போன மன்னனும் எங்கெல்லாம் புத்தர் விஜயம் செய்திருந்தாரோ அந்த இடங்களில் எல்லாம் அவருக்கு நினைவுச் சின்னங்களை அமைக்குமாறு கூறினார். போதி மரத்தை எடுத்து வந்த ஊர்வலம் பிராம்மன் தவக்கா என்ற கிரதாமத்தில் நுழைந்து அங்கும் இங்குமாக இருந்த பல இடங்களைக் கடந்து பதினான்காம் நாள் அனுராதபுராவிற்கு அருகில் இருந்த ஊரை அடைந்தது. இரவும் பகலும் அந்த ஊர்வலம் வந்த வழி முழுவதும் கோலங்கள் போடப்பட்டு, இரதத்தின் மீது பூக்கள் தூவப்பட்டு, வழிகள் அனைத்திலும் தோரணங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஊர்வலம் மாலை பொழுது சாயும் வேளையில் அனுராதபுரத்தின் வடக்குப்புற நுழை வாயில் வழியே நுழைந்து, தெற்குப்புற நுழை வாயில் வழியே வெளியேறி மஹாமேஹவானராமா என்ற இடத்தில் புத்த பிக்குக்கள் போதி மரத்தை வைக்க முன்னரே அமைத்து இருந்த இடத்தை அடைந்தது. அந்த இடத்தை அடைந்ததும் பல்வேறு நகைகள் அணிந்து ஜொலித்தபடி வந்திருந்த அரச வம்சத்தை சார்ந்த பதினாறு பேர்களுடன் சேர்ந்து மன்னன் அந்த போதி மரத்தை இரதத்தில் இருந்து இறக்கி முன் காலத்தில் போதி மரம் இருந்த இடமான ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்தார்.

அதை கீழே வைத்ததுதான் தாமதம், அந்த மரம் எண்பது கியூபிக் உயரத்துக்குப் பறந்து சென்று அங்கு நின்றிருந்தபடி ஆறு வண்ண மிகு ஒளிக்கதிரை வீசிற்று. அந்த தீவைத் தவிற அந்த ஒளி பிரும்மலோகம் வரை பரவி சூரியன் மறையும் வரை இருந்தது. அங்கு கூடி இருந்த பத்தாயிரம் மக்கள் அந்த

அற்புதமான காட்சியை அனுபவித்து பார்த்தபடி நின்றனர். அவர்கள் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு அரஹன்தாக மாற இருந்தனர்.

மாலையில் சூரிய அஸ்தமனம் துவங்க போதி மரம் கீழ் இறங்கி வந்து புமியில் தன்னைப் பதித்துக் கொண்டது. அது ரோஹிணி நட்சத்திரத்தின் தினம். குடுவையில் இருந்து வெளி வந்த அதனுடைய கெட்டியான வேர்கள் குடுவையுடன் நிலத்திற்குள் செல்ல இருப்பது போல அந்த குடுவையை சூழ்ந்து கொண்டு இருந்தன. அந்த நேரத்தில் பூமி குலுங்கியது. அந்த போதி மரம் தன்னை ஸ்தாபித்துக் கொண்டவுடன் பல திசைகளில் இருந்தும் வந்தவர்கள் அந்த மரத்திற்கு தீபாராதனை செய்து, பூக்கள் துாவி, வாசைன திரவியங்கள் படைத்து வழிபட்டனர். அதன் பின் கரு மேகங்கள் சூழு பெரும் மழை வந்தது. அடுத்து அந்த மரத்தை சுற்றி பனி மழை பொழிய அந்த மரம் கண்களுக்குத் தெரியாமல் முழுமையாக மறைந்தது. ஏழு நாட்களுக்கு அந்த மரமே கண்களுக்குப் புலப்படாமல் இருந்த பின் எட்டாவது நாள் பனி விலக, ஆறு வண்ணங்களை வாரி இறைத்தபடி போதி மரம் மக்களுடைய கண்களுக்குத் தெரிந்தது.

போதி மர ஸ்தாபன விழாவில் கலந்து கொள்ள தரா மஹீன்தாவும், பிக்குனி சங்கமித்தாவும் அந்த இடத்திற்கு சென்றனர். அது போல மன்னனும் தன் பரிவாரங்களுடன் அங்கு சென்றார். கஜரகாமா *(Kajaragama)*, கண்டனகாமா *(Candanagama)* , பிரம்மன் திவக்கா *(Brabman Tivakka)* , குடி மக்கள், போன்ற அனைவரும் அதே இடத்தில் வந்திருந்தனர். அப்படி வந்தவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே

அந்த மரத்தின் கிழக்குப் பகுதிக் கிளையில் பழும் காய்த்துத் தொங்கிய அதிசயத்தையும் அவர்கள் கண்டனர்.

தேரா அந்த தங்கக் குடுவையுடன் கூடிய மரத்தை மன்னனிடம் தந்தார். அதைப் பெற்றுக் கொண்ட மன்னனும் அதை மஹாசானா *(Mahäässana)* என்று பின்னர் அழைக்கப்பட்ட இடத்தில் நட்டார். அனைவருடைய முன்னிலையிலும் அந்த மரம் எட்டு வேர்களுடன் நான்கு கியூபிக் உயரமாக தோன்றியது.

அந்த இளம் செடி நிழலில் இருக்குமாறு அதன் தலை மீது ஒரு பெரிய வெண்சாமரக் குடையை அமைத்தார். வந்திருந்த எட்டு போதி மரக் கிளைகளில் ( *கன்று* ) முதலில் போதி மரம் இருந்த இடமான ஜம்புகோலாவில் ஒன்றையும், பிரும்மன் தவக்காவின் கிராமத்தில் ஒன்றையும், துாபராமாவில் ஒன்றையும், இஸ்ஸாரசாம்னராமாவில் *(Issarasamanäräma)* ஒன்றையும், ஸ்துாபி இருந்த இடத்தில் ஒன்றையும், சிடியா மலை, கஜாரகாமா, மற்றும் கண்டகாமாவில் ஒவ்வொன்றுமாக நடப்பட்டது. ஆனால் பின்னர் அந்த போதி மரத்தின் நான்கு பழங்களில் இருந்து வந்த முப்பத்தி இரண்டு கன்றுகளை ஒரு யோஜனை துாரத்தில் இருந்த பல்வேறு விகாராக்களில் நட்டனர்.

சம்மசம்புத்தாவின் முயற்சியினால் அந்த தீபகற்பத்தின் நலனுக்காக போதி மரம் நடப்பட அனுலாவும், அவருடன் மேலும் பலரும் சங்கமித்தாவிடம் இருந்து பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு அரஹன்தாக மாறினர். அது போல இளவரசர் அரிட்டாவும் தன்னுடன் ஐநுாறு பேர்களை அழைத்துப் போய் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று

அரஹன்த் ஆயினர். போதி மரத்தை எடுத்து வந்த பொழுது அதனுடன் வந்த எட்டு வியாபாரிகள் சங்கமம் 'போதி மர சங்கம்' என்ற பெயர் பெற்றது.

உபசீகவிஹாரா *(Upäsikävihära)* என்ற பெயரில் அமைந்திருந்த கன்னி மாடத்தில் சங்கமித்தா தன்னுடைய சகோதர துறவினிகளுடன் இருந்து வந்தாள். அவள் முயற்சியினால் அங்கு பன்னிரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதில் மூன்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவற்றில் ஒன்றில் போதி மரத்தைஎடுத்து வந்த கப்பலின் பாய் மரம், மற்றொன்றில் திசை திருப்பும் சுக்கான் மற்றும் மூன்றாவதில் கவசம் போன்றவற்றை அந்த கப்பலின் நினைவாக வைத்திருக்கும்படிக் கூறினாள். மேலும் பின்னர் தோன்றிய பல ஹட்டஹலாகா பிக்குணிகளின் *(Hatthälhaka-bhikkhunis)* உபயோகத்திற்காக மற்றவை பயன் படுத்தப்பட்டன.

கடம்பா *(Kadamba)* மலர்க் கொடிகள் புத்துக் குலுங்கிய குளுமையான இடத்தில் வைக்கப்பட்டு இருந்த அந்த நாட்டு மன்னனின் பட்டத்து யானை அங்கு தன் இஷ்டம் போல் நடந்து திரிந்து கொண்டு இருந்தது. அந்த குளுமையான இடம் யானைக்கு ஒத்துப் போய் இருந்ததினால் அந்த இடத்தில் யானைக் கோட்டத்தை அமைத்து இருந்தனர். ஒரு நாள் அந்த யானை தனக்கு போடப்பட்ட உணவை உண்ண மறுத்த பொழுது அதைக் கேள்விப்பட்ட மன்னன் அதற்கான காரணத்தைப் தேராவிடம் கேட்ட பொழுது அவர் யானை இருந்த இடத்தில் ஸ்துாபியை கட்டினால் மட்டுமே இனி உணவை உண்ணும் என்று கூறி விட மன்னன் சற்றும் தயங்காமல் அந்த இடத்தில் ஸ்துாபி ஒன்றை நிர்மாணித்து

புனிதரின் புனிதச் சின்னம் ஒன்றையும் வைக்க ஏற்பாடு செய்தார்.

தேரி சங்கமிதாதா ஒரு அமைதியான இடத்தில் சென்று வசிக்க விரும்பினாள். தொடர்ந்து அந்த விகாராவில் போதனைகளை ஏற்க வந்த கூட்டத்தினால் ஏற்பட்ட தொந்தரவே அதற்குக் காரணம். ஆகவே அந்த பிக்குணி சிடியா வீட்டிற்குச் சென்று ஒரு நாள் தங்கிவிட்டாள்.

பிக்குணிக்கு என்றும் போல் தன் வணக்கங்களைத் தெரிவிக்க வந்த மன்னனுக்கு பிக்குணி அங்கு இல்லை எனத் தெரிய வர அதற்கான காரணத்தை மற்றவரிடம் இருந்து தெரிந்து கொண்ட தேவனாம்பியதிஸ்ஸா உடனடியாக யானைக் கோட்டமும் துாபாவும் இருந்த இடத்தில் அவர்கள் தங்கிக் கொள்ள அருமையான ஒரு குடில் அமைத்துத் தந்தார். அதனால் அது ஹடல்ஹகாக *(Hatthälhaka)* விகாரா என்ற பெயர் பெற்றது.

அப்படிப்பட்ட அந்த அற்புதமான அமைதியான விகாராவில் தேரிணிகள் தங்கிக் கொண்டனர். பல அற்புதங்களைக் கண்ட மேகமேகா பூங்காவில் இப்படியாக அமைந்த அனைத்து இடங்களும், ஸ்ரீலங்காவின் மேன்மைக்காக கொண்டு வரப்பட்ட போதி மரம் மற்றும் புத்தருடைய போதனைகள் என அனைத்தும் வெகு காலத்திற்கு மக்களினால் பெருமையாகப் பேசப்பட்டு வந்தது .

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பத்தொன்பதாம் பாகமான ' போதி மர ஸ்தாபனம்' முடிவுற்றது.